# செலவழுங்குதல் நிகழ்வும் ஃப்ராய்டின் உளப்பகுப்பாய்வும்

**முனைவர் து. ராஜம்மாள்**
உதவிப் பேராசிரியர்> தமிழ்த்துறை
பூ.சா.கோ. கலை அறிவியல் கல்லூரி> கோவை.

அமுக்கப்பட்ட வேட்கைகளும் அவற்றின் வகைக்கெழுக்களும் திரிபு வடிவில் மட்டும் வெளிப்பட அனுமதிக்கப்படுகின்றன. இத்தகு கனவுத் திரிபுருவாக்கங்களை அறிவியல் பூர்வமாகத் தெளிவாக்கிக் கொண்டால் இராக் கனவுகள் எல்லாம் விருப்ப நிறவேற்றங்கள் என்பதை ஏற்பதில் எவ்விதச் சிரமமும் இல்லை. இதே வழியில் பகற்கனவுகளும் - புனைவுகளும் விருப்ப நிறைவேற்றங்களாகின்றன- ஃப்ராய்ட் .

மனித மனங்களை அறிந்து கொள்ளும் அறிவியல் துறையாக உளவியல் செயற்படுகின்றது. இலக்கியங்கள் மனித மனத்தின் வெளிப்பாடாகும். அவ்வகையில் பண்டைய இலக்கியங்களில் கூறப்படும் நிகழ்வுகளுள் செலவழுங்குதல், செலவழுங்குவித்தல் என்ற இரு நிகழ்வுகளைக் கட்டுரைக்கான பொருண்மையாகக் கொள்ளலாம். கற்புக்காலத்தில் பொருளுக்காகத் தலைவன் தலைவியைப் பிரிந்து செல்கின்றான். அவன் செல்லும் சூழல் அவன் மேற்கொண்டு பயணம் செய்யவிடாது தற்காலிகமாகத் தடுத்து நிறுத்துவதற்கான நிலையை உருவாக்கும் அப்போது தலைவன் தனிமையில் தன் நெஞ்சிற்குத் தன்நிலையினை உரைக்கும் நிலை 'நெஞ்சொடு கிளத்தல்' என்கின்றோம். அவ்வாறு தலைவன் தன் நெஞ்சுக்குக் கூறும் போது நனவு மனச் செயல்பாடுகளும் நனவிலி மன உணர்வுகளுமே ஒன்றுக்கொன்று எதிர் கொள்கின்றன. இம்மும்முனைச் செயல்பாடுகளை ஆழ்மனத்தில் உறைந்து கிடக்கும் உணர்வுகளை வெளிக் கொணரும் திறனை உளவியலாளர்கள் உளப்பகுப்பாய்வு முறையில் விளக்குவர் அகநானூற்றில் இடைச்சுரத்தில் செலவழுங்கிய செலவழுங்குவித்த தலைவனின் மனச்செயல்பாடுகள் உளப்பகுப்பாய்வு நோக்கில் இங்கு விளக்கப்படுகிறது.

## செலவழுங்குதல்

செலவு - பயணம், அழுங்குதல் - தவிர்த்தல் கற்புக் காலத்தில் தலைவன் 'வினையே ஆடவர்க்கு உயிரே' என எண்ணி பொருள்வயிற் பிரிகின்றான். அவ்வாறு பிரியும் தலைவன் பல்வேறு நிகழ்வுச் சூழல்கள் தன்னை தன் தலைவியிடம் இருக்குமாறு உணர்த்துகின்றன என்ற மனநிலையில் இடையிலேயே தன் பயணத்தை தவிர்த்து வருதல் ஆகும். அப்போது தன் மனதுக்கும் தனக்குமான உளவியல்

போராட்டம் நெஞ்சொடு கிளத்தலாக அமைகின்றது. தோழி, பாணன், பாகன் போன்றோர் தலைவியின் நிலையை உரைத்து அவன் செலவினை தவிர்த்தல் செலவழுங்குவித்தலாகும். இச்செலவழுங்குதல் நிகழ்வு கூற்றுவகையில் அமையும். தலைவன் கூற்று நிகழ்த்துபவராகவும், கேட்பவராக நெஞ்சம் அமையும்.

பிரிவுத் துயரத்தினால் தலைவன் தன் நெஞ்சிற்குக் கழறும் முறையினை வைத்து, நெஞ்சிற்குச் சொல்லிச் செலவழுங்கியது, நெஞ்சிற்குச் சொல்லி செலவழுங்குவித்தது என அமையும். இத்தன்மை பிரிவு, பிரிவின் நிமித்தமாக நிகழ்கின்றது.

## ஃப்ராய்டின் உளப்பகுப்பாய்வு

இலக்கிய உலகிற்கு உளப்பகுப்பாய்வினை அடையாளப்படுத்தியவர் சிக்மண்ட் ஃப்ராய்டு. உளப்பகுப்பாய்வு என்பது மனிதனின் ஆழ்மன உணர்வுகளை, மனத்துள் புதைந்து கிடக்கும் விருப்பங்களை மும்மனச் செயல்பாடுகளின் வழி வெளிக் கொணரும் முறையாகும். ஃப்ராய்டு மனத்தின் செயல்பாடுகளையும், மனத்தின் நிலையினையும், மூன்றாகப் பகுப்பு செய்கின்றார். அவை (id)-பண்படா உள்ளம், (ego)-தன்முனைப்பு, (super-ego)-பண்பட்ட உள்ளம் என்கின்றார். தலைவனின் பாலுணர்வாற்றலும் இன்பமனச் செயல்பாடும் ஃப்ராய்டு இட்(id) என்ற பண்படா உள்ளத்தில் தூண்டல் ஆற்றல், லிபிடோ(ibido) என்ற பாலுணர்வின் வயப்பட்டது. இந்த இன்ப இயல்பூக்கம் உள்ளத்தின் ஆற்றலுக்கெல்லாம் தோற்றுவாயாக உள்ளது என்பார். இம்மனம் மரபு நிலையில் வந்த இயல்பூக்கங்கள் உந்துதல்களைக் கொண்டது. பிறப்பிலிருந்தே இது இயல்பாக இருக்கின்றது. இது மனிதனின் ஆளுமையைப் புரிந்து கொள்ள முடியாத ஒரு குழப்பமான பகுதியாகும். இது அதிர்ச்சியூட்டும் உணர்ச்சியின் உறைவிடம் எத்தகைய அமைப்பு மற்ற இன்பநிலை உணர்வுகளுக்கு இயல்பூக்கங்களின் தேவைகளுக்கு ஏற்ப நிறைவு தேடுகின்ற ஒரு தூண்டல் ஆற்றல் என்றும் உளவியலாளர் மனத்தின் பகுதியை விளக்குவர்.

## செலவழுங்கும் தலைவனின் மனநிலை

கற்புக் காலத்தில் செலவழுங்கும் தலைவன் இடைச்சுரத்தில் தன் நெஞ்சிற்கு தன் தலைவியை மாண்புடைய குறுமகள் நீங்கியாங்கு வந்தனன் கொல்? என வினவுகிறான். அரும்பிய சுணங்கினள், திதலை அல்குல், தடமென்பணைத்தோள், மடமிகு குறுமகள, மடநல்லோள் என்று தலைவியிடம் தாம் முன்பு இன்பம் துய்த்த நிலையினைத் தலைவியின் உறுப்பு நலன்களை எண்ணிப் பார்த்து மனம் ஆறுதல் அடைகின்றான். இவ்வுணர்வாற்றல் எல்லா மனிதனிடமும் இயல்பாக அமைவது. ஆனால் செலவழுங்குதல் நிகழ்வு பொருள் கடைக்கூட்டிய பொழுதும் பாலுணர்வு வயப்பட்ட தூண்டல் ஆற்றலும் தலைவியிடம் பெறும் இன்பமும் செலவைத் தவிர்க்க வைக்கின்றன. இடைச்சுரத்தில் தலைவியைத் தலைவன் நேரே காண முடியாவிடினும் முன்பு இன்பம் துய்த்த நிலையினை எண்ணி ஆறுதல் அடைவது போன்ற பாலுணர்வாற்றலின் தூண்டற் செயற்பாடுகளாகும். இவ்வகையான தன்மைக்கு அவனின்

அகச்சூழல்களும் பருவமன உணர்வுகளுமே காரணமாக அமைகின்றன. இப்பாலுணர்வுத் தூண்டல் ஆற்றலை அப்படியே கட்டுப்பாடற்று ஓடவிடாது தடுத்து நிறுத்தி உலகியல் அறிவை நடப்பு நிலையில் அறிவுறுத்துவது தன்முனைப்பின் செயல்பாடாகும்.

## தன்முனைப்புள்ளம்

தன்முனைப்பு என்பது யதார்த்த மனமே ஆகும். மனிதனின் இயல்பு நிலையிலுள்ள உண்மை நிலையை உணர்த்தி அவனது பண்படா உள்ளத்து ஆசைகளை நிறைவேற்றி வைப்பது தன் முனைப்பாகும். பண்படா உள்ளத்தில் எழும் ஆசைகளைத் தடுத்து சந்தர்ப்பங்களுடன் இணைத்து வாழ்வின் சட்டதிட்டங்களுக்கு ஏற்றவாறு செயல்படுத்துவது தன் முனைப்பாகும். பண்படா உள்ளத்திற்கும் பண்பட்ட உள்ளத்திற்கும் இடையே பொறுப்பாளராக இருந்து செயல்படுவது தன்முனைப்பாகும்.

தலைவனின் செயல் பொருளீட்டுவதாகும். பொருளின்மையால் வரும் துன்பங்களை எண்ணுகின்றது மனம். அவற்றால் வரும் தலைவியின் அன்பிற்காக ஏற்றுக் கொள்ளலாம் என்கின்றது மற்றொரு நிலையில், இந்நிலையில் ஆள்வினைக்கு செல்லுதல் எனினும் திரும்புதல் எனினும் அதற்கு நின் துணிவே என்று தலைவன் செலவு தவிர்த்தலுக்கு நெஞ்சைக் காரணமாக்குகிறான். எனினும் தலைவியை விட்டு மீளவும் முடியாது பொருளீட்டச் செல்லவும் முடியாது கலங்குகிறான். இந்நிலையைத் தான் தேய்புரிப்பழங்கயிறு போல வீழும் என் உடம்பு என்கிறான்.

> **“ஆள்வினைக் கெழுந்த அசைவுஇல் உள்ளத்து**
> **ஆண்மை வாங்கக் காமந் தட்பக்**
> **கவைபடு நெஞ்சங் கட்கண் அகைய**
> **இருதலைக் கொள்ளி யிடைநின்று வருந்தி**
> **ஒருதலைப் படாஅ உறிங் போன்றனம்**
> **நோங்கொல் அளியள் தானே யாக்கைக்கு” (அகம் 339)**

என்ற பாடலடியில் என் மனம் இருதலைக் கொள்ளியிடைப்பட்ட எறும்பு போல நம் நிலை ஆயிற்று என்று வருந்துகின்றான். இங்கு தலைவனின் நனவுச் செயல்பாடு வெளிப்படுகிறது. காதலுக்கும், கடமைக்கும் அறிவுக்கும் பாலுணர்வாற்றலுக்கும் இடையே போராட்டம் நிகழ்கின்றது.

தலைவனின் பொருளீட்டும் ஆர்வம் ஒருபக்கம், தலைவியின் நலன் குறித்த இன்பம் மறுபக்கமென வருத்த, நெஞ்சைக் காரணமாக்கிப் பொருட்செலவைத் தவிர்த்து இல்லத்தில் தங்குகின்றான். தலைவனின் பாலுணர்வாற்றலும் இளம்பருவத்து உணர்வும் இணைந்த மனச் செயல்பாடே தன்முனைப்பாக வெளிப்படுகிறது. அதாவது தலைவனின் பொருள் வயிற்பிரிவைத் தடுத்து நிறுத்துகிறது தன்முனைப்பு. இவ்வகையில் தலைவி இல்லத்திலே தலைவன் தங்குவது தற்காலிகமாகிறது.

> **“செலவிடை அழுங்கல் செல்லாமை யன்றே**
> **வன்புறை குறித்தல் தவிர்ச்சியாகும்.” (தொல் நூற். 185)**

இந்நூற்பாவில் கூறும் கருத்து தலைவன் இல்லில் தங்குவது தலைவியை ஆறுதல் அடையச் செய்யும் செயல்பாடாகும். இவ்வகையான மனநிலையைத் தருவது பண்பட்ட உள்ளம் கொண்ட தன்முனைப்பாகும்(the super ego).

## பண்பட்ட உள்ளம்

பண்பட்ட உள்ளம் கொண்ட தன்முனைப்பானது பண்படா உள்ளத்திலெழும் விருப்பங்கள் ஆசைகள் முதலியவற்றைச் சமூகச் செயல்பாடாக வைப்பது இவ்வுள்ளமாகும். தன் முனைப்பு இன்பத்தை நாடுகின்றது. பண்பட்ட உள்ளம் அறநெறியை வற்புறுத்துகிறது. இவ்வாறு தன்முனைப்பின் ஆசைகளை நிறைவேற்றுவதில் இரண்டிற்கும் இடையில் ஒரு போராட்டம் நிகழும். அதனை,

> **"உயர்ந்த ஆள்வினை புரிந்தோய் பெயர்ந்து நின்று**
> **உள்ளினை வாழியென் நெஞ்சே கள்ளின்**
> **மகிழின் மகிழ்ந்த அரிமதர் மழைக்கண்" (அகம் 343)**

> **"வேற்றுநாட் டுறையுள் விருப்புறப் பேணிப்**
> **பெறலருங் கேளிர் பின் வந்து விடுப்பப்**
> **பொருளகப் படுத்த புகன்மலி நெஞ்சமொடு" (அகம் 351)**

என்ற பாடல் வரிகளில் தலைவனின் போராட்ட மன உணர்வுகளே வெளிப்படுகின்றது. ஏனெனில் இம்மூன்று மன உணர்வுகளையும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாது. இப்போராட்ட உணர்வுகள் எல்லாம் பண்பட்ட உள்ளம் கொண்ட தன்முனைப்பு செயல்படாதவாறு அன்புணர்வும் காதல் உணர்வும் கலந்த தன் முனைப்பு வெளிப்பாடு அங்கே மேலோங்கி நிற்கத் தலைவன் செலவைத் தற்காலிகமாகத் தவிர்கின்றான். அன்றப் பொருளீட்டத் துணிந்த நிலையில் உண்மையான பண்பட்ட உள்ளம் வாழ்க்கை அறநெறிகளை உணர்த்தி அவனைச் சமநிலைப்படுத்திப் பொருளீட்டும் கடமை உணர்விற்கு இட்டுச் செல்கிறது.

ஃப்ராய்டு மனச் செயல்பாடுகளை ஆழ்மன விருப்பங்களை வெளிக் கொணரும் நிலைகளை உளப்பகுப்பாய்வில் விளக்குகிறார். நெஞ்சொடு கிளத்தலில் வரும் தலைவனின் ஆழ்மன விருப்பம் பொருளீட்டுதல் ஆகும். ஆள்வினைச் சிறக்கச் செயல்படுதலேயாகும். 'வினையே ஆடவர்க்குயிரே என்ற உணர்வில் தலைவனின் மனச் செயல்பாடுகள் வெளிப்படுகின்றன. தலைவன், தலைவியிடம் பெறும் இன்பத்தை நினைக்கும் நிலை 'இட்' என்ற பாலுணர்வாற்றல் ஆகும். இப்பண்படா உள்ளச் செயல்பாடானது தலைவனின் பொருட்பிரிவைக் கட்டுப்படுத்த முனைகிறது. தன்முனைப்புள்ளம் தலைவியின் பிரிவுத் துயரைக் காரணப்படுத்தி அவளால் பெறும் இன்பத்தில் செலுத்த முனைகிறது தலைவனின் தன்முனைப்பு. ஆனால் தலைவனின் பண்பட்ட உள்ளம் அவனது வாழ்க்கை மேம்பாடுகளைச் செம்மைப்படுத்தி அவனைப் போராட்ட மனநிலையிலிருந்து விடுவித்து, சமநிலைப்படுத்திப் பின் கடமை ஆற்றும் உணர்விற்கு வித்திடுகின்றது.

## முடிவுரை

செலவழுங்குதல் நிகழ்வில் தலைவன் தன் நெஞ்சிற்கு உணர்த்தும் கூற்றுகள் எல்லாம் அவனது மும்மனச் செயல்பாடுகளும், அச்செயல்பாடுகளில் பொருளீட்டச் செல்வதே தலைவனின் ஆளுமைத் திறன் என்ற விருப்பமாக வெளிப்படுகிறது. ஆழ்மன விருப்பத்தை வழிப்படுத்திச் செயல்பட வைக்கின்றது. பண்பட்ட உள்ளம் கொண்ட தன்முனைப்பாகும். தன் கடமையை மும்முனை போராட்டங்களைக் கடந்து ஆற்ற விரும்பும் தலைவனின் பண்பட்ட உள்ளம் கொண்ட தன் முனைப்பு பெற்றவன் என்பதை அறிய முடிகின்றது.

## பார்வை நூல்கள்

1.ந.மு. வேங்கடசாமி நாட்டார் (உ.ஆ)- அகநானூறு
2.முனைவர் இரா.ஜெகதீசன் - தொல்காப்பியம் பொருளதிகார வழி அகநானூறு - ஓர்ஆய்வு.
3.வை. சச்சிதானந்தன் - ஒப்பிலக்கியம் ஓர் அறிமுகம்.
4.ச. ரவீந்திரநாதன் - இலக்கியத்திறனாய்வில் உளவியல் அணுகு நெறி.
5.முனைவர் செ. சாரதாம்பாள் - இலக்கியமும் உளப்பகுப்பாய்வும்.
6.தி.கு. இரவிச்சந்திரன் - தொல்காப்பியமும் ஃப்ராய்டியமும்.